திருச்சிற்றம்பலம்

# 45-ஆம் திருமுறை மாநாடு 2025




# ஓதும்போட்டிப் பாடல்கள்

**திருமுறைகள் ஒலிக்கட்டும் திருவருள் பெருகட்டும்**

**வெளியீடு**

**திருமுறை மாநாட்டு ஏற்பாட்டுக் குழு**

ஒலிப்பேழையில் பாடியவர்:

**திருமுறைப் பண்ணிசைத் திலகம்**

**சிவத்திரு சோ. வைத்தியநாத தேசிகர்**

ஒலிப்பேழையில் முன்னுரை:

**சிவத்திரு கண்ணா கண்ணப்பன்**

செயலாளர், திருமுறை மாநாடு ஏற்பாட்டுக் குழு

திருச்சிற்றம்பலம்

# பிரிவு R1, R2 & R3

**(02-01-2019 க்கும் 01-01-2021 க்கும் இடையே பிறந்தவர்கள்– N/K1/K2)**

(பங்கு பெறுவோர் மூன்று பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

**பண்: காந்தாரம்** தாளம் : ரூபகம்

திருச்சிற்றம்பலம்

**பூச இனியது நீறு புண்ணியம் ஆவது நீறு**
**பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக்கு எல்லாம்**
**ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு**
**தேசம் புகழ்வது நீறு திரு ஆலவாயான் திருநீறே.**

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசர் அருளிய **திருக்குறுந்தொகை**

ராகம்: மாயாமாளவகௌளை தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

**பண்ணி லோசை பழத்தினி லின்சுவை**
**பெண்ணொ டாணென்று பேசற் கரியவன்**
**வண்ண மில்லி வடிவுவே றாயவன்**
**கண்ணி லுண்மணி கச்சியே கம்பனே.**

திருச்சிற்றம்பலம்

**மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்**

**ராகம்: மோகனம் தாளம்: ஆதி**

திருச்சிற்றம்பலம்

**வேத மொழியர்வெண் ணீற்றர்செம் மேனியர்**
**நாதப் பறையினர் அன்னே என்னும்**
**நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கும்**
**நாதர்இந் நாதனார் அன்னே என்னும்**

திருச்சிற்றம்பலம்

# பிரிவு R4, R5 & R6

**(02-01-2016 க்கும் 01-01-2019 க்கும் இடையே பிறந்தவர்கள்–** P1/P2/P3)

(பங்கு பெறுவோர் நான்கு பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

**பண் : சீகாமரம்** **தாளம்: ரூபகம்**

திருச்சிற்றம்பலம்

**எம்பிரா னெனக்கமுதம் ஆவானுந் தன்னடைந்தார்**
**தம்பிரா னாவானுந் தழலேந்து கையானுங்**
**கம்பமா கரியுரித்த காபாலி கறைக்கண்டன்**
**வம்புலாம் பொழிற்பிரம புரத்துறையும் வானவனே.**

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

**பண் : வியாழக்குறிஞ்சி** தாளம் :**ஆதி**

திருச்சிற்றம்பலம்

**மருந்தவன் வானவர் தானவர்க்கும்**
**பெருந்தகை பிறவினொ டிறவுமானான்**
**அருந்தவ முனிவரொ டால்நிழற்கீழ்**
**இருந்தவன் வளநக ரிடைமருதே.**

திருச்சிற்றம்பலம்

**திருநாவுக்கரசர்** அருளிய தேவாரம்

**திருக்குறுந்தொகை** தாளம் : **ஆதி**

திருச்சிற்றம்பலம்

**இருந்து சொல்லுவன் கேண்மின்க ளேழைகாள்**
**அருந்த வந்தரும் அஞ்செழுத் தோதினால்**
**பொருந்து நோய்பிணி போகத் துரப்பதோர்**
**மருந்து மாகுவர் மன்னுமாற் பேறரே**

திருச்சிற்றம்பலம்

**சுந்தரர் அருளிய தேவாரம்**

**பண்** : **காந்தாரம்** தாளம் : **ஆதி**

**திருச்சிற்றம்பலம்**

**கரையுங் கடலும் மலையுங் காலையும் மாலையும் எல்லாம்**
**உரையில் விரவி வருவான் ஒருவன் உருத்திர லோகன்**
**வரையின் மடமகள் கேள்வன் வானவர் தானவர்க் கெல்லாம்**
**அரையன் இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்**

**திருச்சிற்றம்பலம்**

# பிரிவு R7, R8 & R9

**(02-01-2013 க்கும் 01-01-2016 க்கும் இடையே பிறந்தவர்கள் P4/P5/P6)**
(பங்கு பெறுவோர் ஐந்து பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

## திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

பண் : **இந்தளம்** தாளம் : **ஜம்பை**

திருச்சிற்றம்பலம்

**முன்னிய கலைப்பொருளு மூவுலகில் வாழ்வும்**
**பன்னிய வொருத்தர்பழ வூர்வினவின் ஞாலந்**
**துன்னியிமை யோர்கள்துதி செய்துமுன் வணங்குஞ்**
**சென்னியர் விருப்புறு திருப்புகலி யாமே.**

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசர் அருளிய தேவாரம்

**திருவிருத்தம்** தாளம் :

திருச்சிற்றம்பலம்

**மன்னு மலைமகள் கையால் வருடின மாமறைகள்**
**சொன்ன துறைதொறுந் தூப்பொரு ளாயின தூக்கமலத்**
**தன்ன வடிவின அன்புடைத் தொண்டர்க் கமுதருத்தி**
**இன்னல் களைவன இன்னம்ப ரான்றன் இணையடியே.** 1

திருச்சிற்றம்பலம்

## சுந்தரர் அருளிய தேவாரம்

பண் : **நட்டராகம்** தாளம் : **ரூபகம்**

திருச்சிற்றம்பலம்

**இமையோர் நாயகனே இறைவா என் இடர்த்துணையே**
**கமையார் கருணையினாய் கருமாமுகில் போல்மிடற்றாய்**
**உமையோர் கூறுடையாய் உருவேதிருக் காளத்தியுள்**
**அமைவே யுன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே**

திருச்சிற்றம்பலம்

## திருமூலர் அருளிய திருமந்திரம்

**ராகம்: ஆனந்த பைரவி** **தாளம்: ஆதி**

திருச்சிற்றம்பலம்

**எங்கும் திருமேனி எங்கும் சிவசத்தி**
**எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம்**
**எங்கும் சிவமாய் இருத்தலால் எங்கெங்கும்**
**தங்கும் சிவன்அருள் தன்விளை யாட்டதே .**

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் அருளிய பெரியபுராணம்

**ராகம்: மத்திமாவதி** **தாளம்: ஆதி**

திருச்சிற்றம்பலம்

**சொல்லுவ தறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி**
**வல்லைவந் தருளி யென்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி**
**எல்லையில் இன்ப வெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி**
**தில்லையம் பலத்து ளாடுஞ் சேவடி போற்றி யென்ன**

திருச்சிற்றம்பலம்

# பிரிவு R10 & R11

## (02-01-2009 க்கும் 01-01-2013 க்கும் இடையே பிறந்தவர்கள் Sec 1- 4)

## (பங்கு பெறுவோர் ஐந்து பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

**பண் : பழந்தக்கராகம்** தாளம் : ஆதி

**திருச்சிற்றம்பலம்**

**மண்ணார் முழவதிரு மாடவீதி வயற்காழி ஞானசம் பந்தனல்ல**
**பெண்ணா கடத்துப் பெருங்கோயில்சேர் பிறையுரிஞ்சுந் தூங்கானை மாடமேயான்**
**கண்ணார் கழல்பரவு பாடல்பத்துங் கருத்துணரக் கற்றாருங் கேட்டாரும்போய்**
**விண்ணோ ருலகத்து மேவிவாழும் விதியதுவே யாகும் வினைமாயுமே.**

திருச்சிற்றம்பலம்

### திருநாவுக்கரசர் அருளிய தேவாரம்

திருநேரிசை தாளம் : **ஆதி**

திருச்சிற்றம்பலம்

**கோடிமா தவங்கள் செய்து குன்றினார் தம்மை யெல்லாம்**
**வீடவே சக்க ரத்தா லெறிந்துபின் னன்பு கொண்டு**
**தேடிமால் செய்த கோயி றிருவிரா மேச்சு ரத்தை**
**நாடிவாழ் நெஞ்ச மேநீ நன்னெறி யாகு மன்றே.**

திருச்சிற்றம்பலம்

### சுந்தரர் அருளிய தேவாரம்

**பண் : சீகாமரம்** தாளம் : **ரூபகம்**

திருச்சிற்றம்பலம்

**ஏராரும் பொழில்நிலவு வெண்பாக்கம் இடங்கொண்ட**
**காராரும் மிடற்றானைக் காதலித்திட் டன்பினொடும்**
**சீராருந் திருவாரூர்ச் சிவன்பேர்சென் னியில்வைத்த**
**ஆரூரன் தமிழ்வல்லார்க் கடையாவல் வினைதானே**

திருச்சிற்றம்பலம்

திருசேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு

கோயில் (சிதம்பரம்)

ராகம் : ஆனந்தபைரவி தாளம் : **ஆதி**

திருச்சிற்றம்பலம்

**சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்**
**ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற தார்பெறு வார்உலகில்**
**ஊரும் உலகும் கழற உழறி உமைமண வாளனுக்காட்**
**பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே**

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் அருளிய பெரியபுராணம்

**ராகம்**: **மத்திமாவதி** **தாளம்**: **ஆதி**

திருச்சிற்றம்பலம்

**மாதொரு பாக னார்க்கு வழிவழி யடிமை செய்யும்**
**வேதியர் குலத்துள் தோன்றி மேம்படு சடைய னாருக்கு**
**ஏதமில் கற்பின் வாழ்க்கை மனையிசை ஞானி யார்பால்**
**தீதகன் றுலகம் உய்யத் திருவவ தாரஞ் செய்தார்**

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# பிரிவு R12,R13 & R14

(02-01-2009 க்கு முன் பிறந்தவர்கள்)

(பங்கு பெறுவோர் ஐந்து பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

1. விரும்பிய ஒரு தேவாரப்பாடல்
   (ஒன்றாம் திருமுறை முதல் ஏழாம் திருமுறை வரை)
2. விரும்பிய ஒரு திருவாசகப்பாடல் (எட்டாம் திருமுறை)
3. விரும்பிய ஒரு திருவிசைப்பா பாடல் ( ஒன்பதாம் திருமுறை)
4. விரும்பிய ஒரு திருப்பல்லாண்டு பாடல் (ஒன்பதாம் திருமுறை)
5. விரும்பிய ஒரு பெரியபுராணப் பாடல்( பன்னிரண்டாம் திருமுறை )

திருச்சிற்றம்பலம்

## திருஞானசம்பந்தர் தேவாரம்

# 02.043 திருப்புள்ளிருக்கு வேளூர் (வைத்தீசுவரன் கோயில்)

**பண் : சீகாமரம்** தாளம் : **ரூபகம்**

## திருச்சிற்றம்பலம்

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானார் உறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே. 01

தையலாள் ஒருபாகஞ் சடைமேலான் அவளோடும்
ஐயந்தேர்ந் துழல்வாரோர் அந்தணனார் உறையுமிடம்
மெய்சொல்லா இராவணனை மேலோடி யீடழித்துப்
பொய்சொல்லா துயிர்போனான் புள்ளிருக்கு வேளூரே. 02

வாசநலஞ் செய்திமையோர் நாடோறும் மலர்தூவ
ஈசனெம் பெருமானார் இனிதாக வுறையுமிடம்
யோசனைபோய்ப் பூக்கொணர்ந்தங் கொருநாளும் ஒழியாமே
பூசனைசெய் தினிதிருந்தான் புள்ளிருக்கு வேளூரே. 03

மாகாயம் பெரியதொரு மானுரிதோ லுடையாடை
ஏகாய மிட்டுகந்த எரியாடி உறையுமிடம்
ஆகாயந் தேரோடு இராவணனை அமரின்கண்
போகாமே பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே. 04

கீதத்தை மிகப்பாடும் மடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே. 05

திறங்கொண்ட வடியார்மேல் தீவினைநோய் வாராமே
அறங்கொண்டு சிவதன்மம் உரைத்தபிரான் அமருமிடம்
மறங்கொண்டங் கிராவணன்றன் வலிகருதி வந்தானைப்
புறங்கண்ட சடாயென்பான் புள்ளிருக்கு வேளூரே. 06

அத்தியின் ஈருரிமூடி அழகாக அனலேந்திப்
பித்தரைப்போற் பலிதிரியும் பெருமானார் பேணுமிடம்
பத்தியினால் வழிபட்டுப் பலகாலந் தவஞ்செய்து
புத்தியொன்ற வைத்துகந்தான் புள்ளிருக்கு வேளூரே. 07

பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக
மண்ணின்றி விண்கொடுக்கும் மணிகண்டன் மருவுமிடம்
எண்ணின்றி முக்கோடி வாணாள துடையானைப்
புண்ணொன்றப் பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே. 08

வேதித்தார் புரமூன்றும் வெங்கணையால் வெந்தவியச்
சாதித்த வில்லாளி கண்ணாளன் சாருமிடம்
ஆதித்தன் மகனென்ன அகன்ஞாலத் தவரோடும்
போதித்த சடாயென்பான் புள்ளிருக்கு வேளூரே. 09

கடுத்துவருங் கங்கைதனைக் கமழ்சடையொன் றாடாமே
தடுத்தவரெம் பெருமானார் தாமினிதா யுறையுமிடம்
விடைத்துவரு மிலங்கைக்கோன் மலங்கச்சென் றிராமற்காப்
புடைத்தவனைப் பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே. 10

செடியாய வுடல்தீர்ப்பான் தீவினைக்கோர் மருந்தாவான்
பொடியாடிக் கடிமைசெய்த புள்ளிருக்கு வேளூரைக்
கடியார்ந்த பொழிற்காழிக் கவுணியன்சம் பந்தன்சொல்
மடியாது சொல்லவல்லார்க் கில்லையாம் மறுபிறப்பே. 11

**திருச்சிற்றம்பலம்**

திருச்சிற்றம்பலம்

## எண்ணும் அடியார்கள் அண்ணன் மருதரைப்
## பண்ணின் மொழிசொல்ல விண்ணுந் தமதாமே.
## - திருஞானசம்பந்தர் தேவாரம்

பொழிப்புரை :

*மனத்தால் எண்ணி வழிபடும் அன்பர்கள் தலைமையாளராய் விளங்கும் மருதவாணரைப் பண்ணிசையோடு அவர்தம் புகழைப் போற்ற, மண்ணுலகத்தோடு விண்ணுலகமும் அவர்கள் வசமாகும்.*

திருச்சிற்றம்பலம்